**தரம் 05 புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை 02 - 2023**
**வலயக் கல்வி அலுவலகம், மன்னார்**

**சுட்டெண்:** **நேரம்: 1மணித்தியாலம் 15நிமிடம்**

**பின்வரும் பந்தியை நன்கு வாசியுங்கள்**

1. சில ஆண்டுகளுக்கு முன்பு வரை கிராமங்களில் விறகு அடுப்புகள்தான் அதிகம். விறகு அடுப்புகளிலும் பல வகை உண்டு. பெரும்பாலான பகுதிகளில், பிரதான வீட்டிலிருந்து ஒதுங்கியே அடுப்படி இருக்கும். ஒரு பாத்திரம் வைக்கும் அடுப்பு, இரண்டு பாத்திரம் வைக்கும் அடுப்புக்கள் உண்டு. இரண்டு பாத்திரம் வைக்கும் அடுப்பில், ஒரு பகுதியில் விறகு நுழைப்பதற்கான வாய் இருக்கும். ஒரு புறத்தில் இருந்து மற்றொரு புறத்திற்கு தீச்சுடர் செல்ல வழி இருக்கும். மேற்பகுதியில் பாத்திரம் நிலையாக நிற்க, மூன்று குமிழ்கள் இருக்கும். மண்ணில் செய்யப்பட்ட இவை, சுவரை ஒட்டி அமைக்கப்பட்டிருக்கும். புகைபோக்கிகளுடன் இணைக்கும் வகையில் அடுப்பின் ஒரு மூலையில் துளை இடப்பட்டிருக்கும்.

பந்தியை துணையாகக் கொண்டு விடை எழுதுங்கள்.

1. அடுப்புகள் எதனால் ஆக்கப்பட்டுள்ளன?
2. அனல் எனும் கருத்தைத் தரும் ஒத்த சொல்லை தெரிந்து எழுதுங்கள்?
3. அகத்தில் என்பதன் எதிர் கருத்துச் சொல்லை எழுதுங்கள்?
4. புகை வெளியேற்றத்திற்கு அமைக்கப்பட்டுள்ளது எது?
5. விறகு அடுப்புக்கள் எங்கு அதிகம் காணப்பட்டன?
6. குமிழ் என்பதன் பன்மைச் சொல் எது? (6 × 1 = 6 புள்ளிகள்)

2. உயர் திணை நிகழ்கால பன்மை வினைச்சொல்லை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

   i. வருகிறேன் ii. செல்கின்றன iii. வருகிறார்கள்

   (1 புள்ளி)

3. தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்கு படுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.

   காட்டை/சில/தான்/அழிக்கிறார்கள்/மனிதர்கள்/மரங்களை/வெட்டிக்

   ………………………………………………………………………… (2 புள்ளி)

4. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்புகள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எதிரே உள்ள அடைப்புக் குறிக்குள் எழுதுங்கள்.

   i. குமரன் நேற்றுக் காலை பாடசாலைக்குச் சென்றான். ( )
   ii. மீன் குஞ்சுகள் நீரில் நீந்தியது. ( )
   iii. அப்பா தினமும் காலையில் விழித்தெழுவார்கள். ( )
   iv. பகல் வேளையில் பறவைகள் பறந்து சென்றது. ( ) (4 புள்ளி)

5. கீழ்வரும் வாக்கியத்தில் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.
மா வாழை பலா என்பன முக்கனிகளாகும் (1 புள்ளி)

6. i. பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்யுங்கள்
அலை மோதும் போதே............................. (1 புள்ளி)
ii. பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியை புள்ளிக்கோட்டில் எழுதுக.
வறுமையிலும் செம்மையாக வாழ வேண்டும். ........................................
(1 புள்ளி)

7. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக்கூட்டம் உள்ள சொல்லை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.
i. மாமா (அரத்தைக்/அறத்தைக்) கொண்டு கத்தியைத் தீட்டினார்.


ii. உணவு உண்ட பின் சிறிது நேரம் (உலாவுதல் /உளாவுதல்) வேண்டும்.
(2 புள்ளிகள்)

8. பின்வரும் வாக்கியத்தை நிகழ்காலத்தில் எழுதுங்கள்
சிறுவர்கள் சந்தைக்குச் சென்றார்கள் ........................................ (1 புள்ளி)

9. பெண்பாற் சொல்லை எழுதுங்கள்
பேரன்:- ................... (1 புள்ளி)

10. பின்வரும் தொடர்கள் குறிக்கும் தனிச் சொற்களை எழுதுங்கள்
i. ஐம்பதாவது ஆண்டின் இறுதியில் கொண்டாடப்படும் விழா......................
ii. முனிவர்கள் வாழுமிடம்:-........................
iii. நம்பமுடியாத கதை:- ........................... (3 புள்ளிகள்)

11. தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுங்கள்
i. black board:-................................................
ii. principal:-...................................... (2 புள்ளிகள்)

12. தரப்பட்டுள்ள ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.
i.

ii.

........................... ..................... (2 புள்ளிகள்)

13. கீழே தரப்பட்டுள்ள சொற்களை சரியாக ஒழுங்கு படுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக
i. in/ may/I /come :-.................................
ii. a/this/blackboard/is:- .......................... (4 புள்ளிகள்)

14. பாசல என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக? (1 புள்ளி)

15. பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக
கிரி பொன்ன :-................................. (1 புள்ளி)

16. தரப்பட்டுள்ள எண்ணின் எண் பெயரை எழுதுங்கள்
23069 ................................................ (1 புள்ளி)

17.

| | |
|---|---|
| 3 | 7 |
| 9 | 6 |

கட்டத்தினுள் உள்ள இலக்கங்களைக் கொண்டு பத்தினிடத்தில் 7 வரக்கூடிய மிகப்பெரிய எண்ணை எழுதுங்கள்?


18. எண் கோலத்தை பூர்த்தி செய்யுங்கள்?
33, 41, 49,……, …………

19. பின்வரும் எண்களை இறங்கு வரிசைப்படுத்தி எழுதுங்கள்
8706, 7086, 8670, 7084 ………………………………

20. ஒரு பாடசாலையில் 1094 ஆண் பிள்ளைகளும் 987 பெண்பிள்ளைகளும் உள்ளனர்

i. பாடசாலையில் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?
…………………………….

ii. இப் பாடசாலையில் உள்ள பெண் பிள்ளைகளிலும் பார்க்க எத்தனை ஆண்பிள்ளைகள் அதிகமாக உள்ளனர்? ………………………...

21.  உருவில் 3/8 ஐ நிறந்தீட்டுங்கள்?

22. மு.ப 10.00 மணிக்குப் புறப்பட்ட பேருந்து மு.ப 11.45 மணிக்கு உரிய இடத்தைச் சென்றடைந்தது. பேருந்து பயணம் செய்த நேரம் எவ்வளவு?
…………..மணித்தியாலம்………..நிமிடம்

23. 416 இனை 4 இனால் வகுக்கும் போது பெறப்படும் விடை யாது?..............................

24. பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோ கிராமின் விலை | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|
| | | ரூபாய் | சதம் | ரூபாய் | சதம் |
| வெங்காயம் | 3kg | 120 | 00 | 360 | 00 |
| சீனி | 1kg500g | 200 | 00 | …. | … |
| பருப்பு | 2kg | ….. | …. | 480 | 00 |


25. இப் பொருட்களை கொள்வனவு செய்தமைக்காக ரூபா 1500.00 செலுத்தப்பட்டதாயின் கடைக்காரர் மிகுதியாக எவ்வளவு பணத்தை தரவேண்டும்?

26. ஒரு பாத்திரத்தில் 4 லீற்றர் 500மில்லி லீற்றர் நீரும் இன்னொரு பாத்திரத்தில் 6 லீற்றர் 750மில்லி லீற்றர் நீரும் உள்ளது. இரண்டு பாத்திரங்களிலும் உள்ள நீரின் அளவு யாது?

27. ஒரு பையில் 3kg500g சீனி உள்ளது. அதை 250 கிராம் கொண்ட எத்தனை பொதிகளில் கட்டலாம்?

28. ஒரு நாடாவின் நீளம் 5m 75cm ஆகும். இன்னொரு நாடாவின் நீளம் 9m 65cm ஆகும். இரு நாடாக்களினதும் மொத்த நீளம் யாது?


29. உருவில் உள்ள விரிப்பைக் கொண்டு ஆக்கக் கூடிய திண்மம் யாது?



30. ஒரு மணித்தியாலத்தில் சிற்றுண்டிச்சாலை ஒன்றில் விற்பணை செய்யப்பட்டுள்ள இனிப்புப் பண்டங்களின் விபரம் கீழே உள்ள வரைபில் தரப்பட்டுள்ளது.

i. கூடுதலான அளவு விற்பணை செய்யப்பட்ட இனிப்புப் பண்டம் எது? ……………….

ii. ஒரு மணித்தியாலத்தில் விற்பணை செய்யப்பட்ட இனிப்புப் பண்டங்கள் எத்தனை? ………




(15 × 2 = 30 புள்ளி)

**இலக்கம் 31 தொடக்கம் 60 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

31. பின்வரும் நோய்களுள் தொற்று நோய் எது?
   i. வாந்தி பேதி   ii. நீரிழிவு   iii. உயர் குருதி அமுக்கம்

32. அசுத்தமான நீர் , உணவு என்பவற்றை உட்கொள்ளுவதால் ஏற்படக் கூடிய நோய்?
   i. டெங்கு   ii. நீரிழிவு   iii. வாந்திபேதி

33. ஊர்ந்து செல்லும் விலங்குகள் மாத்திரம் இடம் பெறுவது?
   i. பாம்பு, ஓணான், கிளி   ii. பாம்பு, தேள், மைனா   iii. பாம்பு, ஓணான், உடும்பு


34. நாம் உணவாகப் பயன் படுத்தும் மலர்களில் ஒன்று?
   i. செவ்வரத்தை   ii. அகத்தி   iii. வாடாமல்லிகை

35. மாமிச உண்ணி விலங்குகள் மாத்திரம் கொண்டது?
   I புலி, நாய், ஆந்தை   ii. கரடி, புலி, சிங்கம்   iii. நரி, வௌவால், காகம்




36. இறைச்சியை நீண்ட காலமாக வைத்திருப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட பண்டைய முறை?
   i. அவித்தல் ii. உப்பு கரைசலில் அமிழ்த்தி வைத்தல்   iii. தேனில் அமிழ்த்தி வைத்தல்

37. வீட்டுத்தோட்டத்தில் பயிர்களுக்கு இடையில் செவ்வந்திப் பயிரைப் பயிரிடுவதன் முக்கிய நோக்கம்?
   i. மாடுகளிடம் இருந்து பயிரைப் பாதுகாப்பதற்கு.
   ii. பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் பூச்சிகளை விரட்டுவதற்கு
   iii. வீட்டுத்தோட்டத்திற்கு அழகை சேர்ப்பதற்கு.

38. இவ்வுபகரணத்தின் பயன்பாடு?
   i. திசைகளை அறிவதற்கு
   ii. காற்றின் வேகத்தை அறிவதற்கு
   iii. காற்று வீசும் திசையை அறிதல்



39. கீழே உள்ள மின்குமிழ்களில் ஒளிரக்கூடியது எது?

i.  Ii.  Ii 

40. சூரிய ஒளியியை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் செயல்?
i. பழரசம் தயாரித்தல்
ii. பாகற்காய் வற்றல் தயாரித்தல்
iii. பாலில் இருந்து வெண்ணெய் தயாரித்தல்




41. தாவரங்களுக்கு தீங்கு விளைவிக்கும் எலிகளைப் பிடித்துண்ணும் பிராணி?
i. சாரைப் பாம்பு ii. செண்பகம் iii. கீரி

42. வீதிச் சமிஞ்சை விளக்குகளில் பச்சை நிற மின்குமிழ் எரியும் போது அதனால் உணர்த்தப்படுவது?
i. வாகனத்தை நிறுத்துக
ii. வாகனம் பயணிக்குக
iii. வாகனம் பயனிப்பதற்கு தயாராகுக

43. சூழல் மாசடைவதற்கான காரணிகளுள் ஒன்றாக அமையக்கூடியது?
i. குப்பை கூளங்களை நிலத்தில் புதைத்தல்
ii. இறந்த பிராணிகளை நீர் நிலைகளில் வீசுதல்
iii. சூழல் நேயமான வாகனங்களைப் பயன்படுத்துதல்

44. நீர் கொண்ட பாத்திரத்தில் பனிக்கட்டிகள் சிலவற்றை இட்டு அவதானித்த போது பாத்திரத்தின் வெளிப்புறத்தில் நீர்த்துளிகள் காணப்பட்டன. இதற்கு காரணமாக இருக்கக்கூடியது?
i. பாத்திரத்தில் உள்ள நீர் வெளியேரியமை.
ii. பனிக்கட்டி உருகியமை
iii. வளியில் உள்ள நீர் குளிர்ச்சியடைந்து பாத்திரத்தின் வெளிப்புறத்தில் படிந்தமை.

45. தேனீக்களால் தாவரங்களுக்குக் கிடைக்கும் பயன்?
i. பூக்களில் மகரந்தச் சேர்க்கை இடம்பெற உதவுதல்
ii. தாவர வித்துக்கள் பரம்பலடைதல்.
iii. தாவரங்களுக்கு தீங்கு செய்யும் பிராணிகளை அழித்தல்.

46. உப்புக் கரைசல் உள்ள கண்ணாடிக் குவளையினுள் புதிய முட்டை ஒன்றை இட்டால் அது காணப்படும் விதத்தைக் காட்டும் உரு?
i.  ii.  iii. 

47. மனிதன் தொடர்பாடலுக்காக ஆதிகாலத்தில் பயன்படுத்திய முறை நவீனகாலத்தில் பயன்படுத்தும் முறை என்பவற்றை ஒழுங்கு முறையில் குறிப்பிடும் விடை?
i. தொலைபேசியும், தொலை நகலும்
ii. முரசறைதலும், புகைமூட்டுதலும்
iii. தீக்குவியல் மூட்டலும் தொலைபேசியை பயன்படுத்தலும்.

48. காந்தத்தினால் கவரப்படும் பொருட்கூட்டம்?
i. குண்டுசி, கடதாசிக்கவ்வி, சவர அலகு
ii. செப்பு நாணயம், குண்டுசி, இரும்பாணி
iii. பித்தளை நாணயம், வெள்ளிச்சலங்கை, குண்டுசி

49. நாம் வீட்டினுள்ளே செல்லும் போது பாதணிகளைக்கழற்றி விட்டுச் செல்லுதல் நல்ல பழக்கமாகும் . இதற்குக் காரணமாக அமையக்கூடியது?

i. பாதணிகளைக் கழற்றுவதால் பாதங்களுக்கு சௌகரியம் இருப்பதை உணர்கின்றமை.
ii. பாதணிகளில் உள்ள கிருமிகள் வீட்டினுள்ளே நுழைவது தவிர்க்கப்படுகின்றமை.
iii. பாதணிகளை கண்டு பிடிக்க இலகுவாக இருக்கின்றமை.

50. பின்வரும் இடங்களில் உலக மரபுரிமையாகக் கருதப்படுவது?
i. மன்னார் பெருக்கமரம் ii. கதிர்காமம் iii. சிகிரியா

51. உடலுக்கு சக்தியை வழங்கக்கூடிய உணவுக்கூட்டம்?
i. கீரை, சோறு, பருப்பு ii. பருப்பு, பயறு, கடலை iii. சோறு, மரவள்ளி, ஈரப்பலா

52. அனுராதபுரம், பொலநறுவை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய மாகாணம்?
i. வடமேல் மாகாணம் ii. வடமத்திய மாகாணம் iii. ஊவா மாகாணம்

53. நாம் கட்டணம் செலுத்தி பயணிக்கக் கூடிய அதிவேக நெடுஞ்சாலை?
i. கண்டி யாழ்ப்பாணம் நெடுங்சாலை
ii. கொழும்பு மட்டக்களப்பு அதிவேக நெடுஞ்சாலை
iii. தெற்கு அதிவேக நெடுஞ்சாலை

54. எமக்கு இலவசமாக கிடைக்கும் சேவை அல்லாதது?
i. கல்வி ii. சுகாதாரம் iii. குடிநீர்

55. மனிதனின் செயற்பாடுகளினால் தற்போது இலங்கையில் நிகழும் இயற்கை அனர்த்தம்?
i. புயல் ii. மண் சரிவு iii. நில நடுக்கம்

56. இலங்கையின் தேசிய மலர் எது?
i. அல்லி ii. நீலோற்பவம் iii. நாகலிங்கப்பூ

57. பல்வேறு நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுத்தக்கூடிய பூ எது?
i. வில்வம் பூ ii. மல்லிகை iii. தாமரை

58. ‘‘டங்கன் வைற்’’ என்பவர் எப்போட்டியில் பங்குகொண்டு இலங்கைக்கு ஒலிம்பிக் பதக்கம் ஒன்றைப் பெற்றுக் கொடுத்தார்?
i. நீளம் பாய்தல் ii. நானூறு மீற்றர் தடை தாண்டும் ஓட்டம் iii. ஈட்டி எறிதல்

59. கடதாசிகளைக் கிழித்து ஒட்டிச் செய்யப்படும் ஆக்கம்?
i. ஒரிகாமி ii. கொலாஜ் iii. அச்சுப் பதித்தல்.

60. இலவசக் கல்வியின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
i. கொங்காலோ கொடபண்டா
ii. டி.எஸ் சேனநாயக்க
iii. சி.டபிள்யு டபிள்யு கன்னங்கரா (30 × 1 = 30 புள்ளிகள்)

61. ‘‘ வீதி விதிகளைக் கடைப்பிடிப்பதன் அவசியம்’’ எனும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்கு குறையாமல் இருப்பதுடன் எழுவாய், பயனிலை திருத்தங்களுடன் இருத்தல் வேண்டும்.

I. …………………………………………………………………………………………..
…………………………………………………………………………………………..
II. …………………………………………………………………………………………..
…………………………………………………………………………………………..
III. …………………………………………………………………………………………
…………………………………………………………………………………………

(3 × 2 = 6 புள்ளிகள்)